நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77 செட்டியார் தெரு கொழும்பு-11.
டெலிபோன் 422839 434238

(செய்தி இதழாக பதிவு பெற்றது)

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6511 1990 ஜூன் 11 திங்கட்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்



Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

மா. சபை கலைப்பதற்கான

## சட்ட திருத்தத்தை முஸ்லிம்

## —காங். எதிர்க்கும்—

### அஷ்ரப் தினபதிக்கு தகவல்

— எம ஐயூப் —

**கொழும்பு, ஜூன் 10**

**மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடையு முன் அவற்றை கலைக்கக்கூடிய வகையில் அரசாங் கம் கொண்டுவரவிருக்கும் சட்டத்திருத்தத்தை நீதிமன் றத்திலும், நாடாளுமன்றத்திலும் எதிர்ப்பதென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.**

முஸ்லிம காங்கிரஸின் தலைவரும திகாமடுல்ல மாவட்ட எம பி யுமான ஜனாப் எம எச் எம அஷ்ரப் இதனைத் தெரிவித்தார்—

அவர் மேலும தெரிவித்ததாவது:—

மாகாண சபைகளைக் கலைக்கக் கூடிய வகையில் அரசமைப்பு அல்லாத தனியான சட்டம ஒன்றுக்கு அரசு திருத்தம கொண்டுவரவிருக்கிறது—

ஆனால் அதேவேளை மாகாண சபைகளின் பதவிக் காலம 5 ஆண்டுகளாகும என அரசமைப்பில் குறிப்பிடப்படுகிறது—

ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனையை பெற்றே மாகாண சபையைக் கலைக்க வேண்டும எனவும அரசமைப்பில் குறிப்பிடப்படுகிறது—

உத்தேச சட்டத் திருத்தம அரசமைப்பின் இந்த பிரமாணத்துக்கு முரணாகிறது—

திருத்தச் சட்ட வரைவு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வருமபோது இந்த அடிப்படையில் முஸ்லிம காங்கிரஸ் எதிர்ப்பு மனுவொன்றைத் தாக்கல் செய்யும—

அரசியல் ரீதியாகப் பார்த்தால் மத்திய அரசோ அல்லது ஜனாதிபதியோ வேண்டியவாறு மாகாண சபைகளைக் கலைக்க முடியாதவாறு தற்போதைய 13ஆவது அரசமைப்புத் திருத்தமும மாகாண சபைகள் சட்டமும அமைந்துள்ளன—

சிறுபான்மையினருக்கு அதிகார பரவலாக்கல் விடயத்தில் வழங்கப்பட்ட உத்தரவாதங்களில் இதுவும ஒன்றாகும—

தற்போது வடக்கு கிழக்கு மாகாண சபை சமபந்தமாக ஏற்பட்டுள்ள ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்காக சதா காலமும சிறுபான்மையினர் தமக்குள்ள உத்தரவாதத்தை இழக்கும வகையில் சட்டம கொண்டு வருவதை அனுமதிக்க முடியாது—

அந்த அடிப்படையில் நாம உத்தேச மாகாண சபை சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்திலும எதிர்ப்போம—

இப்படி ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்—

[உ—ற]

சோமண்ணை



தாங்கள் மறியலுக்குப் போனாலும பிள்ளைகள் பள்ளிக்கூடம போக வேணும எண்டுதான் பெற்றவை விருமபுகினம பாருங்கோ.

இலங்கையில் நிலைகொண்டிருந்த

## இந்தியப்படை அட்டூழிய கண்காட்சி-மாநாடு நடத்த தடை

### நெடுமாறன் உட்பட 87 பேர் கைது

தஞ்சாவூர், ஜூன் 10

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டு வருடங்களாக நிலை கொண்டிருந்த இந்தியப் படையினரின் அட்டூழியங்கள் பற்றிய படைப்புடன் கண் காட்சி மற்றும தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும மாநாடு ஆகியவற்றுக்கு தமிழ் நாடு அரசு தடை விதித்தது— தஞ்சாவூரில் இவற்றை நடத்துவதற்கு முனைந்த திரு பி நெடுமாறன் உட்பட 87 பேர் கைது செய்யப் பட்டனர்—

தமிழ் நாட்டிலுள்ள 5 கோடி தமிழர்களுக்கும, அதிக சுயாட்சி உரிமை கோரும மாநாட்டுக்கு அரசு தடை விதித்து விட்டது என்று மாநாட்டு அமைப்பாளர்கள் அரசு மீது குற்றம சுமத்தினர்—

காஷ்மீர், மற்றும பஞ்சாபில் தற்போது அரசு பிரிவினைவாத வன்முறைகளை எதிர்த்து போராடி வருகிறது— அந்த அடிப்படையிலேயே தமிழ் நாட்டிலும நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும கூறப்படுகிறது—

சென்னையிலிருந்து 2,000 கிலோ மீட்டர் தூரத்தில் டில்லியிலுள்ள வட இந்தியர்கள் தென் இந்தியாவில் அரசியல் ஆதிக்கம செலுத்துவதற்கு எதிராக தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாத அரசியல் தலைவர்கள் நீண்ட காலமாக பிரசாரம செய்து வருகின்றனர்—

இந்தியாவில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க அந்தஸ்த்தைப் பெற வேண்டும— தேசிய ரீதியில் இது நியாயமானதே என்று தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களில் ஒருவரான பெருஞ்சித்திரனார் இதுபற்றி குறிப்பிடுகையில் தெரிவித்தார்— (உ-ந)

### அ'புரத்தில் கொள்ளை

கொழும்பு, ஜூன் 10

ஆயுதம தாங்கிய கொள்ளைக் கோஷ்டி ஒன்று அநுராதபுரத்தில் உள்ள கடை ஒன்றிலும வீடொன்றிலும நள்ளிரவு நேரத்தில் புகுந்து

(2 அம பக்கம பார்க்க)

### முஸ்லிம் லீக்: கலீல் 40 ஆவது முறையாக தலைவர்

கொழும்பு, ஜூன் 10

தேசமான்ய டாக்டர் எம சி எம கலீல் அகில இலங்கை முஸ்லிம லீக்கின் தலைவராக 40 ஆவது முறையாகவும தெரிவு செய்யப்பட்டுள்ளார்—

முஸ்லிம லீக்கின் மத்திய

(2 அம பக்கம பார்க்க)

குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தும்

## சொத்துக்கள் பறிமுதல்

### ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜூன் 10

குற்றச் செயல்களை புரிவதற்கு உபயோகிக்கப்பட்ட அல்லது உபயோகிக்கப்படவிருந்த சொத்துக்கள் பறி

மன்றத்திற்கு அறிவிப்பார்.

கைப்பற்றப்பட்ட பொருள்களின் சட்டபூர்வ உரிமையாளர்கள் இருந்தால் முன்வருமாறு கோரி மேல் நீதிமன்றம பத்திரி

என சட்ட மா அதிபர் திரு சுனில் டி. சில்வா தெரிவித்தார். (உ-ற)

## புலிகளுடன் பேச

றது—
ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனையை பெற்றே தற்போதைய 13ஆவது அரசமைப்புத் திருத்தமும மாகாண சபைகள் சட்டமும அமைந்துள் ளன—
ஜூம எதிர்ப்போம—
இப்படி ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்—

[உ—ற]

# முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைத்துவத்தை உலமாக்கள் பொறுப்பேற்க அழைப்பு

கொழும்பு ஜூன் 10,

முஸ்லிம சமூகத்தின் அரசியல் தலைமைத்துவத்தை தற்காலிகமாக சட்டத்தரணிகள் ஏற்றுள்ளார்கள் வெகு விரைவில் தகுதியுள்ள உலமாக்கள் இத்தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க முன் வர வேண்டும.

மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தவிசாளரும வடக்கு, கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருமான ஜனாப் எம எச் ஷேகு இஸ்ஸதீன்.

கடந்த சனிக்கிழமை கொழும்பு பழைய நகர மண்டபத்தில் காத்தான்குடி நத்துவத்துல் உலமாச்சபைத் தலைவர் மௌலவி முஹமமத முஸ்தபா தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை உலமாக்களின் செயலமர்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு ஜனாப் ஷேகு இஸ்ஸதீன் உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும

(2 ஆம பக்கம பார்க்க)

கொழும்பு, ஜூன் 10

குற்றச் செயல்களை புரிவதற்கு உபயோகிக்கப்பட்ட அல்லது உபயோகிக்கப்படவிருந்த சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும.

இதற்காக ஜனாதிபதி அவசரகால சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வர்த்தமானியில் இந்த உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்படும சொத்துக்கள் குற்றச் செயல்களுக்காக உபயோகிக்கப்பட்டன என்றோ அல்லது உபயோகிக்கப்பட இருந்தன என்றோ பொலீஸ் மா அதிபர் கருதினால், இந்த உத்தரவுகளின் படி அவற்றை பறிமுதல் செய்வதாக அவர் பிரதேச மேல் நீதிமன்றத்திற்கு அறிவிப்பார்.

கைப்பற்றப்பட்ட பொருள்களின் சட்டபூர்வ உரிமையாளர்கள் இருந்தால் முன்வருமாறு கோரி மேல் நீதிமன்றம பத்திரிகைகள் மூலமும, விளமபரங்கள் மூலமும பொது மக்களுக்கு அறிவிக்கும.

மூன்று மாதங்களுக்குள் அப்படி முன்வந்து, தமது விருப்பத்தின் பேரில் அந்தச் சொத்துக்கள் குற்றச் செயல்களுக்காக உபயோகிக்க இடமளிக்கப்படவில்லை என ஒருவர் திருப்திகரமாக நிரூபித்தால், நீதிமன்றம அவருக்கு நஷ்ட ஈடு வழங்கும.

கிளர்ச்சிக்காரர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்வதே இந்த அவசரகால சட்டப் பிரமாணங்களின் நோக்கமாகும

# புலிகளுடன் பேச ஹமீது நாளை யாழ் வருகிறார்

யாழ்ப்பாணம ஜூன் 9

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நீதி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீது நாளை [செவ்வாய்]. யாழ்ப்பாணம வருகிறார்—

கடந்த வாரம வவுனியாவில் இராணுவத்திற்கும புலிகளுக்கும இடையே நடைபெற்ற மோதல் தொடர்பாகவும எதிர்காலத்தில் இவ்வாறான சமபவங்கள் இடமபெறாமல் செய்வதற்கான வழி வகைகள் பற்றியும ஆராய்வதற்கே அமைச்சர் ஹமீது யாழ்ப்பாணம வருகிறார் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன—

தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் டாக்டர் அன்டன் பாலசிங்கம் மாத்தயா யோகி சுப்பிரமணியம ஆகியோர் கலந்து கொள்வார்களென எதிர் பார்க்கப்படுகிறது—

அமைச்சர் ஹமீது இவ்வார இறுதிக்குள் திருகோணமலைக்கும விஜயம செய்ய இருக்கிறார்—

[உ—மு—120]

# வடக்கு பொலீஸ் நேர்முக பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம ஜூன் 10

வட பகுதிப் பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றுவதற்கு பொலீஸாரை சேர்த்துக் கொள்வதற்கான இறுதி நேர்முகப் பரீட்சை இன்று [திங்கள்] காலை யாழ்ப்பாணத்தில் ஆரமபமாகும—

பிரஸ்தாப நேர்முகப் பரீட்சை இம்மாதம 21 ஆம திகதி வரை 12ஆம 17ஆம திகதிகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் தொடர்ந்து நடைபெறும—

நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்காகக் கொழும்பில் இருந்து சிரேஷ்ட பொலீஸ்

(2 ஆம பக்கம பார்க்க)

## பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க

# போலி ஆவணங்கள் சமர்ப்பித்தால் 7 வருட கடுங்காவல் சிறை தண்டனை

கொழும்பு, ஜூன் 10

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க முயலும பெற்றோருக்கு ஏழு வருட கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கப்படும. இதற்கு வசதி செய்யும விதத்தில் கல்வி அமைச்சின் 1984ஆம ஆண்டின் 4ஆம இலக்க விதி திருத்தப்படும.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தினபதிக்குத் தெரிவித்தார்.

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் பெரும மோசடிகள் இடமபெற்று வருகின்றன என்று கல்வி அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மோசடிகளைத் தவிர்க்கவே கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி புதிய திட்டத்தை வகுத்துள்ளார்.

இவ்வருடத்தில் ஆரமப வகுப்பில் 4 லட்சத்து 26 ஆயிரத்து 203 பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவர்களில் இரண்டு லட்சத்து 20 ஆயிரத்து 74 பேர் ஆண்கள்.

இமமாணவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு தெரிவுக் குழுவினால் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும தெரிவுக் குழுவில் அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும மாணவர் பிரதிநிதிகள் ஆகியோர் இடமபெறுவர்.

தெரிவுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் பெயர்ப் பட்டியல் பொது இடங்களில் பகிரங்கமாக பார்வைக்கு வைக்கப்படும.

தெரிவில் தவறு ஏற்பட்டிருப்பின் அதனை ஆட்சேபிக்க முடியும.

இது தொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் நடத்தப்படும. விசாரணையின் போது போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் சமபந்தப்பட்ட பெற்றோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும.

தண்டனையாக ஏழு வருடங்களுக்கு குறையாத சிறைத் தண்டனை வழங்கப்படும. அதற்கு வசதியாகவே சட்ட விதி திருத்தப்பட இருக்கிறது என்று அந்த அதிகாரி கூறினார்.

(உ—ய)

# யுத்தத்தின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது

## — ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 10

யுத்தம செய்வதன் மூலம பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. அதனாலேயே யுத்தங்கள், மோதல்கள் இன்றி நான் நாட்டை நிர்வகித்து வருகின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச கூறினார்.

பொசன் போயா தினத்தன்று பொலன்னறுவையில் நடைபெற்ற மத வழிபாட்டில் கலந்து கொண்ட பின் அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

ஜனாதிபதி மேலும கூறியதாவது—

யுத்தங்களின் மூலம பல நாடு

(2 ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

### ஓய்வு பெறும் பொதுச் சேவையாளர்கள்

# விரைவில் ஓய்வூதியம் பெற புதிய திட்டம்

## அமைச்சர் பெஸ்டஸ் தகவல்

கொழும்பு, ஜூன் 10

சேவையில் இருந்து ஓய்வு பெறும் பொதுச் சேவையாளர்கள் தமது மாதாந்த ஓய்வூதியத்தை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கென ஒரு புதிய திட்டம் விரைவில் அமுலுக்கு வரும்.

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இத்தகவலைத் தெரிவித்தார்.

புதிய திட்டம் நடைமுறைக்கு வந்ததும் ஓய்வு பெற்ற ஒரு பொதுச் சேவையாளர் தான் இறுதியாக வேலை பார்த்த அலுவலகம் பணியாற்றிய பிரிவு ஆகிய விவரங்களைக் கொண்ட ஒரு கடிதத்தை அலுவலகத் தலைமை அதிகாரியிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இக்கடிதத்தை ஓய்வூதியத் திணைக்களத்தில் அவர் சமர்ப்பித்ததும் முதல் மாதத்துக்கான ஓய்வூதியத்தில் எழுபது சதவீதம் வழங்கப்படும்.

அவருக்கு மிகுதி முப்பது சதவீதமும் அவருடைய சேவைக் காலம் பற்றிய விவரங்கள் திரட்டிக் கணிக்கப்பட்டதும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு அரச சேவையாளருக்கும் "சொந்த கார்டு" என அழைக்கப்படும் கோவை ஒன்று ஏற்படுத்தப்பட இருக்கிறது.

இந்தக் கோவையில் அந்த உத்தியோகத்தரின் சேவைக் காலம் தொடர்பான விவரங்கள் பதியப்பட்டிருக்கும். மேற்படி உத்தியோகத்தர் பணியாற்றும் காரியாலயங்களில் இக்கோவை வைக்கப்பட்டிருக்கும்.

இந்நடைமுறை ஒரு உத்தியோகத்தர் எங்கெங்கு எவ்வளவு காலம் சேவையாற்றியுள்ளார் என்ற விவரங்களைத் தேடித் திரிய வேண்டிய அலைச்சலைக் குறைக்கும்.

இதைத் தவிர ஓய்வூதியம் பெறும் ஒருவருடைய ஒரு ஆண்டுக்கான ஓய்வூதியத் தொகைகளைக் குறிப்பிடும் கார்டு ஒன்று ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

இந்த நடைமுறை செயலுருவம் பெற்றதும் மாதாந்த ஓய்வூதிய ஆவணம் வந்து சேரும் வரை காத்திருக்க வேண்டியிருக்காது.

பாடசாலை ஆசிரியர்கள் தமது கார்டில் அல்லது சேவைப் பதிவு புத்தகத்தில் தாம் கடமையாற்றும் பாடசாலை அதிபர்களின் குறிப்பையும் கையெழுத்தையும் பெற வேண்டியிருக்கும். இப்புத்தகத்தில் ஒரு ஆசிரியரது சம்பள அதிகரிப்பு பதவி உயர்வு உட்பட சேவை தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கியிருக்கும்.

நடைமுறைப்படுத்த இருக்கும் புதிய திட்டம் பற்றி தகவல் தெரிவித்த அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா எதிர்வரும் 20ஆம் திகதி ஓய்வூதியம் பெறுபவர்களைச் சந்தித்து அவர்களது குறைகளைத் தாம் கேட்டறியப் போவதாகத் தெரிவித்தார்.

[ந—032]

---

### ஐ. தே. க. வேட்பாளர்கள் வாக்கெடுப்பு மூலம் தெரிவு

கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்படும்.

நகரசபை, மாநகரசபை, பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் நடைபெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ந-வ)

---

## கைத்தொழில்நிறுவனங்கள் சூழல் பாது. அதிகாரிகளை நியமித்துக்கொள்ள வேண்டும்

—நிமல் விக்கிரமசிங்க

கொழும்பு ஜூன் 10

கைத்தொழில் நிறுவனங்கள் சூழல் பாதுகாப்பு அதிகாரிகளை நியமித்துக் கொள்ள முன்வர வேண்டும்.

சூழல் பாதுகாப்பு அமைச்சரும் கொள்கை வகுப்பு ராஜாங்க அமைச்சருமான திரு விமல் விக்ரமசிங்க இப்படித் தொழிலதிபர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நிறுவனங்கள் தங்களுக்கென கணக்காளர்கள், ஆளணி முகாமையாளர்கள், விற்பனை முகாமையாளர்கள் ஏற்றுமதி முகாமையாளர்கள் என பலரை நியமித்துக் கொள்கின்றன, ஆனால் நிறுவனத்தின் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான விடயங்களைக் கவனிக்க ஒருவரை நியமிக்க முன்வருவதில்லை என்று அமைச்சர் கூறினார்.

சூழல் பாதுகாப்பு சட்ட விதிகள் என்ற பொருள் பற்றிய கருத்தரங்கு "சவ்சிறிபாயா" மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பல தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் விக்ரமசிங்க சூழல் பாதுகாப்புக்கென கைத்தொழில் நிறுவனங்கள் ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டிய அவசியம் பற்றி அங்கு எடுத்துரைத்தார்.

கைத்தொழில் நிறுவனங்கள் பின்பற்றப்பட வேண்டிய சூழல் பாதுகாப்புச் சட்ட விதிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அமுலுக்கு வரவிருப்பதாலேயே இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இங்கு உரையாற்றிய மத்திய சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் எஸ் ஏ ஜினதாச, தாம் சட்ட விதிகளை தொழிலதிபர்களிடம் திணிக்க முற்படவில்லை என்றும் பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனையூடாக தமது லட்சியத்தை அடைவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும் கூறி...

---

### முஸ்லிம் லீக்...

---

### ஜனாதிபதி தலையிட்டதையடுத்து

## துண்டிக்கப்பட்ட குழாய்நீர் விநியோகம் மீண்டும் கிடைத்தது

கண்டி, ஜூன் 9

கண்டி சுதும்பொலயில் வசிக்கும் கண்டி மாநகர சபை வரியிறுப்பாளர் ஒருவர் தமக்கு வழங்கப்பட்ட நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டதால் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட பின் அவருக்கு நிவாரணம் கிடைத்தது.

கெட்டம்பை — கண்டி புதிய நெடுஞ்சாலைப் பணிகள் இப்பொழுது கண்டியில் சுதும்பொல ஊடாக நடைபெற்றுக் கொண்டிருப்பது தெரிந்ததே.

இந்த வேலைத் திட்டம் காரணமாக அந்த வரியிறுப்பாளரின் வீட்டுக்குப் பொருத்தப்பட்டிருந்த குழாய் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட அந்த நபர் கண்டி மாநகர சபைக்கு பலமுறை சென்று தடைப்பட்ட நீர் விநியோகத்தை மீளப் பெற்றுத் தருமாறு கேட்டார். இவரது முயற்சி பலனளிக்கவில்லை.

பொறுமையை இழந்த அவர் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவுக்கு கடிதம் மூலம் அறிவித்தார்.

கடிதம் அனுப்பப்பட்டு ஓரிரு நாட்களுக்குள் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அந்த நபருக்கு மீண்டும் குழாய் நீர் கிடைத்தது.

கண்டி மாநகர சபையினால் செய்ய முடியாத பணி ஜனாதிபதியின் மூலம் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்ட சம்பவம் மாநகரசபைக்கே இழுக்காகும் எனக் கூறி மாநகரசபை உறுப்பினரான திரு றொபர்ட் குணவர்தனா கண்டி மாநகர சபையில் தெரிவித்தார்.

கண்டி மேயர் திருமதி சந்திரா ரணராஜா தலைமையில் நடைபெற்ற கண்டி மாநகர சபைக் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட சம்பவம் எதிர்க் கட்சித்...

---

## மக்கள் நிம்மதியாக வாழும் சூழ் நிலை இன்று உருவாகியுள்ளது

—இம்தியாஸ் பாக்கீர்

கொழும்பு ஜூன் 10

நாட்டில் இன்று அமைதியும் சமாதானமும் நிலவுகிறது. குண்டுகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் பயந்து பீதியுடன் வாழ்ந்த மக்கள் நிம்மதியோடு வாழக் கூடிய சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு கூறினார்.

பேருவளைத் தொகுதியில் உள்ள பயாகலையில் பல அபிவி...

...வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மேலும் பேசுகையில் கூறியதாவது—

ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியில் ஏழைகளுக்கு விடிவு காலம் ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நாட்டில் வறுமையை ஒழித்து ஏற்றத்தாழ்வற்ற ஓர்...

...சனையுடன் செயல்பட்டு வருகிறது.

இன்றைய அரசு காலத்தில் கிராமப் புறங்களில் அதிக அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இதனால் கிராமப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகின்றது என்றார்.

விழாவில் மேல் மாகாண உணவு கூட்டுறவு, கைத்...

---

# இன்றைய திரைகளில்

**2 வது வாரம்**

கெப்பிட்டல்
(கொட்டாஞ்சேனை)
10-30, 2-30, 6-00, 9-30

ரியோ
(கொம்பனித்தெரு)
(குளிரூட்டப்பட்டது)
வெள்ளி முதல் திங்கள் வரை
காட்சி நேரங்கள்
10-30, 2-30 6-00, 9-00
செவ்வாய் முதல் வியாழன் வரை
காட்சி நேரங்கள்
10-30, 2-30, 6-00

ராணி
(யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-00

கமல்ஹாசன் — அமலா
நடித்த
**சத்யா**
(கலர்)

**3 வது வாரம்**

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
2-30, 6-00 9-30

கொன்கோட்
(தெகிவளை)
10-30, 2-00 6-00, 9-00

மனோகரா
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00, 9-00

ரஜனிகாந்த் — கௌதமி
பேபி ஷாலினி — வி கே ராமசாமி
நடித்த
ஏ வி எம்மின்
**ராஜா சின்ன ரோஜா**
(கலர்)

**4 வது வாரம்!**

முருகன்
(ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15

சுபராஜ்
(மட்டக்களப்பு)
2-30, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-30

விஜிதா
(ஹட்டன்)
2-30, 6-30
சனி/ஞாயிறு 10-30

னார்.

சூழல் பாதுகாப்பு சட்ட

## முஸ்லிம் லீக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபை நேற்று கொழும்பு புதுக்கடையில் உள்ள அதன் தலைமையகத்தில் கூடியது.

அப்போது நடைபெற்ற தலைவர் தெரிவின் போது டாக்டர் கலீல் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

லீக்கின் இணைச் செயலாளர்களாக ஐ. ஏ. த. க. எம் பி ஜனாப் எம் எச் ஆமித்தும் சட்டத்தரணி ஜனாப் எஸ் ஜே மொஹிதீனும் பொருளாளராக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜனாப் முகம்மத் ஸெய்னும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் லீக்கின் பொதுக் கூட்டத்தின் போது லீக்கின் ஏனைய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர்.

[உ—ற]

## பெயர் மாற்றமும் மத மாற்றமும்

கொழும்பு-13 இலக்கம் 97/3, கன்னார வீதி எனும் முகவரியில் வசிக்கும் சுப்பராஜ் கிருஸ்ண ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை முகம்மது கிஸாம் என மாற்றியுள்ளேன். எனவும் எதிர்காலத்தில் சகல ஆவணங்களிலும் முகம்மது கிஸாம் என்றே கையொப்பமிடுவேன் என்றும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையொப்பம்
முகம்மது கிஸாம்
033374

தாச, தாம சட்ட விதிகளை தொழிலதிபர்களிடம் திணிக்கமுற்படவில்லை என்றும் பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனையூடாக தமது லட்சியத்தை அடைவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

(ந-032)

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஆமதியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு கூறினார்.

பேருவளைத் தொகுதியில் உள்ள பயாகலையில் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட

## முஸ்லிம் சமூ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது-

"உலமாக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். உலமாக்கள் ஒற்றுமைப்படுவதுடன் முஸ்லிம் சமூகத்தையும் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒற்றுமைப்படுத்தத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைத்துவத்தைத் தற்காலிகமாக சட்டத்தரணிகள் ஏற்றுள்ளார்கள். வெகு விரைவில் தகுதியுள்ள உலமாக்கள் இத்தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க முன்வர வேண்டும்" இப்படி அவர் கூறினார்.

செயலமர்வில பிரதம அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட எம் பியுமான ஜனாப் எம் எச் எம் அஷ்ரப் பேசினார்.

அவர் கூறியதாவது—

இன்றைய உலமாக்கள் அரசியல்வாதிகளின் கூட்டங்களை துவக்கிவைக்கும் போது கிராத் ஓதுபவர்களாகவும், கூட்டங்கள் முடிவடையும் போது பாத்திஹா ஓதுகிறவர்களாகவும் உள்ளார்கள்.

அரசியல் வாதிகளுக்கு அடிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இருந்து உலமாக்கள் விடுவிக்கப்பட வேண்டும். சமூகத் தலைமைத்துவத்தை உலமாக்கள் பூரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்படி அவர் கூறினார்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கென தனி ஒரு மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும் என்ற செயலமர்வில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரபு மொழியை முஸ்லிம்களின் வீட்டு மொழியாக அமையச் செய்ய வேண்டும்.

அரபுக் கலாசாலைகளின் பட்டதாரிகளுக்கென ஓர் உயர் கல்வி ஸ்தாபனம் நிறுவப்பட வேண்டும்.

உலமாக்களுக்கென ஓர் ஆராய்ச்சிக்கழகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

வட்டியில்லாப் பொருளாதார முறையும் பைதுல்மால் அமைப்பு முறையும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பன போன்ற மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(உ).

## வடக்கு பொலீ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் ஒருவரின் தலைமையில் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வழங்கி உள்ள பெயர்ப் பட்டியலின் அடிப்படையிலேயே இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

[உ—மு—120]

ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியில் ஏழைகளுக்கு விடிவு காலம் ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நாட்டில் வறுமையை ஒழித்து ஏற்றத்தாழ்வற்ற ஓர் சமுதாயத்தை உருவாக்குவதே அவரது லட்சியமாகும்.

சகல கட்சிகளும், சகல இன மக்களும் வேற்றுமைகளை மறந்து வறுமை நிலையைப் போக்கி நாட்டை சுபீட்சப் பாதையில் இட்டுச் செல்ல ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்.

பின்தங்கிய, கிராமப்புறங்களைக் கட்டியெழுப்புவதில் இந்த அரசாங்கம் அதிக கரிசனையுடன் வருகிறது நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இதனால் கிராமப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகின்றது என்றார்.

விழாவில் மேல் மாகாண உணவு கூட்டுறவு, கைத்தொழில், கடற்றொழில் சமூக நல அமைச்சர் ஜனாப் ஏ எம் யூஸுப், களுத்துறை மேலதிக அரசாங்க அதிபர் திரு குணசேகர மேல்மாகாண சபை உறுப்பினர்களான திரு பி டி எஸ் அம்பகுணவர்தன, நெல்சன் தர்மசிறி அல்விஸ் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

(ந-007)

## யுத்தத்தின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கைப்பற்றி இறுதியில் தன் தவறை உணர்ந்து புத்த சமயத்தை தழுவியவர் அசோக சக்கரவர்த்தி.

அவருடைய குமாரன்தான் எமது நாட்டுக்குப் புத்த மதத்தைக் கொண்டு வந்தார்.

நான் ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு பதவிக்கு வந்தால், ஜாதி, மத, இன பேதங்களை மறந்து எல்லோரையும் இந்நாட்டு மக்களாக கருதி தர்மாசோகனுடைய கொள்கையின்படி நாட்டை நிர்வகிப்பேன் என்று வேட்பாளராக என்னை நிறுத்த எமது கட்சி தீர்மானித்த போது கூறினேன்.

இன்றும் அந்த அடிப்படையிலேயே நான் நாட்டை நிர்வகித்து வருகின்றேன்.

துட்டகைமுனு அரசனும் தனது எதிரியை மதித்தான். அவருடைய செய்கை எமக்கொரு எடுத்துக்காட்டு.

சிக்கல்களையும் மோதல்களையும் தவிர்ப்பதற்கு ஒரே வழி மக்கள் அனைவரையும் ஒன்றிணைப்பதே.

இவ்வாறு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச கூறினார்.

அமரபுர மகா சங்கத்தின் தலைவர் வண மடிகே பஞ்ஞாசீக தேரரும் மற்றும் பலரும் உரையாற்றினர்.

(உ-ம)

## அ'புரத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

98 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் ரொக்கப் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு நடந்தது.

விவசாயி ஒருவரின் வீட்டில் நுழைந்து 82 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் நகைகள் ஆகியவற்றையும் கடை ஒன்றில் புகுந்த 16 ஆயிரம் ரூபா தங்க ஆபரணங்களையும் கொள்ளையிட்டுச் சென்றிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

[உ—மு]

னரான திரு றொபர்ட் குணவர்தனா கண்டி மாநக சபையில் தெரிவித்தார்.

கண்டி மேயர் திருமதி சந்திரா ரணராஜா தலைமையில் நடைபெற்ற கண்டி மாநகர சபைக் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட சம்பவம் எதிர்க் கட்சித் தலைவரான றொபர்ட் குணவர்த்தவினால் எடுத்துக்காட்டப்பட்ட பொழுது ஜனாதிபதியின் நேரடியான இந்த முயற்சியைப் பலரும் பாராட்டினர்.

(ந-017)


சாயா
(மாவனெல்ல)
10-30, 2-30, 6-00, 9-00
கமல்ஹாசன் — அம்பிகா
நடித்த
உயர்ந்த உள்ளம்
(கலர்)

* இந்திய ஜனாதிபதியால் தங்கப் பதக்கம் பெற்ற சித்திரம்.
* பேசும்படம் பத்திரிகையால் சிறந்த படம் என்ற பாராட்டிதழை பெற்ற சித்திரம்

கிங்ஸ்லி
(கொழும்பு)
10-30, 2-30, 6-00, 9-30
ஈரோஸ்
(பாமன்கடை)
10-30, 2-30, 6-00, 9-30
வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00, 9-30
ரகுவரன் — லட்சுமி
சந்திரசேகர் — மாதுரி
விசு — மனோரமா
நடித்த
ஏ வி எம் மின்
சம்சாரம் அது மின்சாரம்

(மட்டக்களப்பு)
2-30, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-30
விஜிதா
(ஹட்டன்)
2-30, 6-30
சனி/ஞாயிறு 10-30
பயங்கர சண்டை காட்சிகள் இனிமையான பாடல்கள் நிறைந்த சித்திரம்
அர்ஜுன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த
சங்கர் குரு
(கலர்)

9 வது வாரம்
வின்சர்
(யாழ்நகர்)
(கடைசி 2 தினங்கள்)
10-30 2-30 6-00 9-30
நியூ திலெவாளி
(நவரெலியா)
10-20, 2-30, 6-00
பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த
இது நம்ம ஆளு
(கலர்)

10 வது வாரம்
ஸ்ரீதர்
(யாழ்நகர்)
(12 ஆம் திகதி வரை)
10-30, 2-30, 6-00
தாஜ்மஹால்
(மாத்தளை)
10-0, 2-00 6-00
14 ஆம் திகதி முதல்
கிரனடா
(பேருவளை)
ரஜனிகாந்த — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)

# மேனிக்கு மெருகூட்டுவதில் மாதுரி ஒரு மாதிரி!

நடிகைகள் பொதுவாக உடலை கவர்ச்சியாக வைத்திருப்பதிலேயே குறியாக இருப்பார்கள் அந்த வகையில் மாதுரி ஒரு மாதிரி. அது பற்றி அவரே கூறுகிறார் கேளுங்கள்

"என் புருவங்களே எனது அழகுக்கு, கவர்ச்சிக்கு— சினிமா சான்சுக்குக் காரணம—

ஒரு முறை ஸ்ரீவித்யா கூட— என் புருவங்களை புகழ்ந்து பேசி இருக்காங்க— பள்ளியில படிக்கிறப்ப ஆசிரியைகளும தோழிகளும "எந்த அழகு நிலையத்தில போயி புருவத்தை தீட்டினேன்னு கேட்டு வியந்திருக்காங்க—

என் அக்கா சத்தியசித்ரா அடிக்கடி அழகு நிலையம போவாங்க ஆனா நான் போக மாட்டேன்.

லிப்ஸ்டிக் போடும பழக்கமே எனக்குக் கிடையாது. என் அக்கா இருபத்தி நான்கு மணி நேரமும லிப்ஸ்டிக்கிலேயே இருக்கிறது— எனக்குப் பிடிக்காது—

மேக்கப் நேரத்தில் லிப்ஸ்டிக் போட்டாலும வேடத்தை கலச்ச ஒடனே அழிச்சிடுவேன். லிப்ஸ்டிக் போடறதுக்கு முன்னாடி ஐபுரோ பென்சிலால் வரஞ்சிட்டு தான் போடுவேன்.

எனக்கு குங்குமப் பொட்டுன்னா ரொமபப் பிடிக்கும். நான் நடிக்கிற படங்கள்ல குங்குமம் வெச்சுகிட்டு ஒரு காட்சியிலாவது நடிச்சு பிறகு தான் நடிப்பைத் தொடர்வேன்.

எனக்கு ரப்பர் வளையல்களை விட கண்ணாடி வளையல்கள் தான் ரொமபப் பிடிக்கும.

நான் "சிவப்பு மலர்கள்" படத்தில நடிக்குறப்ப வில்லன் அடிக்கிற காட்சியில வளையல் எல்லாம ஒடஞ்சு போனதெப்பாத்து வயிரே எரிஞ்சு போச்சு. ஒரே நாள்ல ஐநூறு ரூபாய்க்கு மேல வளையல் வாங்கி இருக்கேன்.

ஐதராபாத் வளையல்னா புதையல் கெடச்ச மாதிரி. சாப்பாட்டே கூட மறந்திடுவேன்.



மாதுரி

சின்ன வலி... தொடர்ந்து கண்ணீரு கொட்ட ஆரமபிச்சுட்டுது. அப்புறந்தான் அது அழ வைக்கிற தெரிஞ்சவங்க ஐதராபாத் போனா வளையல் வாங்கி வரச் சொல்லிடுவேன்.

எனக்கு மொத படத்திலேயே அழுவுற காட்சி. கண்ணில் போடறதுக்கு வளவளப்பான திரவத்தைக் குடுத்தாங்க. நான் மொதல்ல ரொமப பயந்து போயிட்டேன்.

அக்காதான் தைரியம சொல்லி கண்ணில போட்டாங்க. கொஞ்ச நேரத்தில ஊசி குத்றாப்பில கிளிசரின்ங்கிறது தெரிஞ்சது. நான் அழாமெ நடிச்ச படமேயில்லை.

காதில விதவிதமான குண்டலங்களைத் தொங்க விட்டு விட்டு துவாரம பெரிசாகி தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி விட்டது— இப்பெல்லாம் ரொமப நைசான அணிகளேதான் தொங்க விடறேன்.

விக் வெச்சு வெச்சு வியர்த்துப் போய் இருந்த இயற்கை மயிரெல்லாம கொட்டிப் போச்சு. இருக்கிற கொஞ்சம மயிரை கவனமா பாதுகாத்து வர்றேன் பண்டிகை நாள்ல மட்டும எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பேன். மற்றபடி ஷாமபூ குளியல்தான்.

(இ—10)



மனம போல் மாங்கல்யம கிடைத்து விட்டால் முகம் மட்டுமா மலரும, வாழ்வும அல்லவா மலரும.
(சத்யராஜ் — ரூபினி) (படம— உலகம பிறந்தது எனக்காக)

(இ—10)

## "உயர்ந்தவன்" ஐஸ்வர்யா தயாரிப்பு

ஐஸ்வர்யா ஸ்கிரீன்ஸ் தயாரித்த "உயர்ந்தவன்" படத்தில் ராமஜி ரகுவரன் சந்திரசேகர் ஜெய்கணேஷ் எஸ் எஸ் சந்திரன் சார்லி ஸ்ரீவித்யா சாந்திபிரியா மாதுரி கோஸ்வ சரளா நடித்துள்ளனர்—

## நிழல்கள் ரவி ராதா காதல் விவகாரம்

ராதாவின் கற்புக்கு ஆபத்து ஏற்பட்ட போது "நிழல்கள் ரவி" தனது உயிரை பொருட்படுத்தா இரவும, பகலும ரவியின் முகம கண்களுக்குள் வந்து ராதாவை தொல்லைப்படுத்தியது—

# அரசாங்க தோட்ட தொழிலாளருக்கு வீடுகள்

## சுவீடன் நிதி உதவி

மாத்தறை, ஜூன் 9

மாத்தறை மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக சுவீடன் நிதி உதவியிலிருந்து 63 லட்சத்து 12 ஆயிரம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது—

அக்குரஸ்ஸ, தெனியாய, ஹக்மனை, வெலிகம, கம்புறுபிட்டிய ஆகிய தொகுதிகளிலுள்ள 15 தோட்டங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கவே இப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது—

காணி, வீடு வசதியற்ற குறைந்த வருமானமுடைய தோட்டத் தொழிலாளர்களுக்கே இத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படும்.

வீடுகளுக்கான பாதைகள் நிர்மாணித்தல், மின்சார வசதி, குடிநீர் வசதி என்பவையும் இப் பணத்தின் மூலம் செய்து கொடுக்கப்படும்.

[ரி—430]

## சுற்றாடல் தினப் போட்டி

கொழுமபு, ஜூன் 8

சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நுவரெலியா மாவட்ட தமிழ் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளின் இறுதித் தெரிவு கண்டி மாவட்டத்தில் நடத்தப்படும—

இதற்கென நுவரெலியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் போட்டிகள் இடம பெற்றன—

[—வ]

## நாட்டு அபிவிருத்தி இளைஞர் கையில்

—பெஸ்டஸ் பெரேரா

குளியாப்பிட்டிய, ஜூன் 9

நாட்டின் துரித அபிவிருத்திக்கு கிராமப் பிரதேச இளைஞர், யுவதிகள் முக்கிய பங்களிப்பைச செய்ய வேண்டும்.

இவ்வாறு பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா கூறினார்.

குளியாப்பிட்டிய கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் (பிரதேச அலுவலகம்) அண்மையில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவினால் நக்காவத்தையில் திறந்து வைக்கப்பட்டது—

அலுவலகத் திறப்பு விழா குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு பியசோம உபாலி தலைமையில் நடைபெற்றது—

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

நாட்டின் துரித அபிவிருத்திக்கு ஏற்ப நாட்டின நிர்வாகமும் பன்முகப்படுத்தப்பட்டு வருகிறது—

அண்மைக் காலத்தில் நாட்டில் வன்செயல்கள் ஏற்படாதிருந்தால் நாடு துரிதகெதியில் அபிவிருத்தி கண்டிருக்கும் என்று கூறினார்.

அவரைத் தொடர்ந்து பேசிய வடமேல் மாகாண சபை முதலமைச்சர் திரு காமினி ஜெயவிக்ரம பெரேரா பேசுகையில் கூறியதாவது—

குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் வடமேல் மாகாண சபையின் நடமாடும் அமைச்சு சேவைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்துப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தினால் குருநாகல், புத்தளம் மாவட்ட கிராமப் பிரதேச மக்களின் அதிகமான பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு பியசோம உபாலி ...

## தொகை மதிப்பீடு பாடசாலைகளில் ஆரம்பம்

வறக்காப்பொளை, ஜூன் 9

1990 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தொகை மதிப்பு ...



## கல்முனை சர்வோதய அன்பளிப்பு

நிந்தவூர் அல்—மினா வித்தியாலய மாணவர்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென கல்முனை மாவட்ட சர்வோதய மத்திய நிலையம் குடிதண்ணீர் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

வித்தியாலய அதிபர் ஜனாப் ஏ எல் எம் அமீன் அமைக்கப்பட்ட கிணற்றிலிருந்து முதலாவதாக தண்ணீரை அள்ளி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காண்க.

[ரி—217]

## கொழும்பில் அரபு நட்புறவு சங்கம்

மையில் கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் அங்குரார்ப்பணம செய்து வைக்கப்பட்டது—

மாதுரி கோஸ்வ சரளா நடித்துள்ளனர்-

ஜே பி நாயுடு தயாரிக்க அசோகராஜ் டைரக்ட் செய்தார் ஒளிப்பதிவு கணேசபாண்டியன்- இசை கங்கைஅமரன்-

(ம—10)

ராதாவின் கற்புக்கு ஆபத்து ஏற்பட்ட போது "நிழல்கள் ரவி" தனது உயிரை பொருட்படுத்தாமல் ரவுடிகளுடன் மோதி அவர்களை விரட்டி அடித்தார்.

அவர் மீது ராதாவுக்கு காதல் அரும்பியது.

இரவும, பகலும ரவியின் முகம கண்களுக்குள் வந்து ராதாவை தொல்லைப்படுத்தியது-

நாளடைவில் ரவியும ராதாவை விருமபினார். இருவருக்கும இடையே காதல் மலர்ந்தது-

இவர்கள் காதலை இருவரின் பெற்றோர்களும ஏற்றுக் கொண்டார்களா? இல்லையா? இதனை "மனைவி வந்த நேரம" வந்தவுடன் பார்த்துக் கொள்ளலாம்.

இதில் ரகுமான், விஜயகுமார், எஸ் எஸ் சந்திரன், தே நடராஜ், செஞ்சி கிருஷ்ணன், டக்ளா ராமு, சித்தாரா, அனுராதா, பாக்யா ஆகியோரும நடிக்கிறார்கள்.

பாபு ஒளிப்பதிவு செய்கிறார். சந்திரபோஸ் இசை அமைக்கிறார்.

கதை, திரைக்கதை, வசனம. டைரக்ஷன் பொறுப்புகளை காரைக்குடி நாராயணன் கவனிக்கிறார்.

(இ-10)

# நிமிடத்திற்கு ஒரு முத்தம்

காதலியின் கடைக்கண் பார்வையிலே தான் எத்தனை சுகம. காதலியைக் கணமும பிரிய மனம இல்லாத ரகு [ரகுமான் தான்] காதலியிடம நவீன நிபந்தனை ஒன்றை விதித்தார்-

"நாளை மாலை சரியாக ஆறு மணிக்கு வர வேண்டும... இல்லாவிட்டால் தாமதமாக வரும [ஒவ்வொரு நிமிடத்துக்கும ஒவ்வொரு முத்தம தர வேண்டும"

நினைத்தாலே இனிக்கும நிபந்தனை!

தலையாட்டி விட்டுச் சென்ற காதலி சந்தர்ப்பவசத்தால் 10 நிமிடம தாமதமாக வர ரகு மனசுக்குள்ளே மகிழ்ச்சி மத்தாப்பு... நிபந்தனைப்படி நிமிடத்துக்கு ஒரு முத்தம பரிமாறப் பட்டதா என்பதை அறிய "மனைவி வந்த நேரம" வரும வரை பொறுத்திருங்கள்-

[ —10]

1990 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தொகை மதிப்பு தற்போது பாடசாலைகளில மேற்கொள்ளப்பட்டு வருகிறது

ஜூன் மாதம் முதலாம் திகதியில் உள்ளபடி பாடசாலைகளில் தற்போது இத் தொகை மதிப்புக் கணக்கெடுப்பு நடைபெறுகிறது. இதன் பொருட்டு நாடெங்கிலும உள்ள பாடசாலைகளுக்கும தொகை மதிப்பு பட்டோலைகள் அனுப்பப்பட்டுள்ளன.

இப் பட்டோலையில் கேட்கப் பட்டுள்ள புள்ளி விவரங்களை பிழையின்றி சரியான விவரங்களுடன் நிரப்பும் பொருட்டு ஒவ்வொரு கல்விப் பிராந்தியத்திலும பாடசாலை அதிபர்களுக்கென விசேட அறிவுறுத்தல் கூட்டங்கள் ஏற்கனவே நடைபெற்றுள்ளன.

பூரணவர், ஆசிரியர் விவரங்களுடன் ஆசிரியர் சம்பளம், பஸ் பருவகாலச் சீட்டுப் பெறும மாணவர்கள், வசதிக் கட்டணம், ஆசிரியர்களின் லீவு, பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்கள் போன்ற முக்கிய விவரங்கள் இத்தொகை மதிப்பின் போது திரட்டப்படுகின்றன-

[ரி—333]

# ரஞ்சனிக்கு திடீர் திருமண ஏற்பாடு



ரஞ்சனி

முழுக்க, முழுக்க கிராமிய சூழ்நிலையில் வளர்ந்த பெண் ரஞ்சனி- இவருக்கு பட்டாளத்தான் என்றாலே சிமம சொப்பனம,

ஆனால் அவருடைய பெற்றோர்கள் ராணுவத்தில் பணி புரியும கார்த்திக்கு ரஞ்சனியை திருமணம செய்து கொடுக்க முடிவு செய்தார்கள்-

பட்டாளத்தான் தனக்கு கணவனாக வருவதை விருமபாத ரஞ்சனி வீட்டை விட்டு ஓடினார்-

அதே ஊரில் உள்ள அவருடைய முறை மாப்பிள்ளையான ஆனந்தராஜுக்கு ரஞ்சனி மீது நீண்ட நாளாக ஆசை வீட்டை விட்டு வெளியேறிய ரஞ்சனியை அவர் பின் தொடர்ந்தார்-

ஆள் அரவமற்ற ஒரு இடத்தில் ரஞ்சனியை கட்டிப்பிடித்து கற்பழிக்க முயன்றார்-

அந்த வழியாக வந்த கார்த்திக் ஆனந்தராஜை அடித்த உதைத்த ரஞ்சனியை காப்பாற்றினார்-

இப்படி ஒரு காட்சி "கல்யாண ராசி" படத்தில் இடம பெறுகிறது-

(இ-10)

தினபதி சினிமா

# பள்ளிக்கூட மதிய உணவு

ஏறாவூர், ஜூன் 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுக்கான முத்திரைகள் வழங்குவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

கல்வி அமைச்சினால் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப் பட்டுள்ள சுற்றறிக்கையில் மதிய உணவு பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளது-

[ரி—073]

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு பியசோம உபாலி, உள்நாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் திருமதி அமரா பியசீலி ரத்நாயக்க உட்பட மற்றும் பலர் அங்கு பேசினர்.

[ரி—138]

# நட்புறவு சங்கம் அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஜூன் 11

"இலங்கை - யாக் அரபு நட்புறவுச் சங்கம" என்ற தேசிய இயக்கம ஒன்று அண் ... டது-

இந்த சங்கத்தின் தலைவராக நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டார்- செயலாளராக டாக்டர் பஸ்லிஸ் நிஸார் தெரிவானார்-

[இ-த]


## இப்பொழுது பெறலாம்!

குணசேன

## ஆங்கில-தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00

பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்




## எம். டி. குணசேன

அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்

இந்தியா—நேபாளம்

# துண்டிக்கப்பட்ட உறவு மீண்டும் வலுப்பெறும்

## பிரதமர்கள் இருவரும் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றி

புதுடில்லி, ஜூன் 10

**துண்டிக்கப்பட்டிருந்த இந்திய — நேபாளம் வர்த்தக உறவு மீண்டும் வலுப்பெறும். இது குறித்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.**

இந்தியாவில் நடந்த 2 ஆம கட்ட பேச்சுவார்த்தைகளின் பின் இதுபற்றி அறிவிக்கப்பட்டது—

இந்தியாவக்கும, நேபாளத்துக்குமிடையிலான வர்த்தக உறவை சீர் செய்ய முடியாது போனால் நான் ராஜினாமாச் செய்வேன் என நேபாளம பிரதமர் கிருஷ்ண பிரசாத் பத்கா ராய் வெள்ளியன்று அறிவித்திருந்தார்—

இது விடயத்தில் இந்தியப் பிரதமர் வி பி சிங்கைச் சந்திக்கப் புறப்படுவதற்கு முன்னர் அவர் இவ்வாற கூறினார்—

இந்தியப் பிரதமருக்கும நேபாளப் பிரதமருக்கும இடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் பின் விரிவான முறையில் இணக்கம காணப்பட்டது—

இரு தரப்பிலான சகல வித உறவுகளையும வளர்த்துக் கொள்வது குறித்த பேச்சுக்கள் வெற்றியளித்திருப்பதாக அதிகாரி ஒருவர் கூறினார்—

கடந்த அண்டு மார்ச் மாதம் இந்தியா, நேபாளத்துடனான உறவை முறித்துக் கொண்டது— அவ் வேளையில் முக்கியமான எல்லைப்புற பாதைகள் 15 இல் 13 ஐ இந்தியா மூடிவிட்டது—

இந்தப் பாதைகளைத் திறந்து விடவும இந்தியா இப்போது இணங்கியிருக்கிறது—

நேபாளம சீனாவிடமிருந்து அயுதங்களைக் கொள்வனவு செய்ததால் இந்தியா நேபாளத்தை பகைத்துக் கொண்டதாக ராஜதந்திரிகள் கருதுகின்றனர்—

நேபாளப் பிரதமர் பத்தாராய் கடந்த ஏப்ரல் மாதமே பிரதமராகப் பதவியேற்றார்—

(எ)

### கப்பல் விபத்து: சூழல்பாதிப்பு

வாஷிங்டன் ஜூன் 10

நோர்வே எண்ணெய்க் கப்பல் ஒன்ற டெக்ஸாஸ் கடற் பிராந்தியத்தில் தீப்பற்றி எரிந்தது—

இந்தத் தீ விபத்தினால் சூழல் பாதிக்கப்படும என அச்சம தெரிவிக்குப்படுகிறது—

கழிவு எண்ணெய் ஒழுக்கினால் எண்ணெய் கடல் நீருடன் கலந்து இந்தப் பாதிப்பு ஏற்படும ஆபத்து உருவாகியிருக்கிறது—

(எ)



உயிரிழந்த அமெ. வீரர் பரிசோதனை

மணிலாவிலிருந்து சுமார் 80 கிலோ மீட்டர் தொலைவில் வடக்கில் உள்ள ஏன்ஜலீஸ் நகரில் அமெரிக்கர்கள் இருவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டனர்.

அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த இந்த வீரர்கள் இருவரையும டாக்டர் ஒருவர் பரிசோதிப்பதைப் படத்தில் காண்க.

(எ*த)

## உலகச் செய்திகள்

## பாகிஸ்தானுக்கு கடத்தப்படவிருந்த 40 சிறுவர்கள் மீட்பு

டாக்கா ஜூன் 10

சிறவர் கடத்தல் ஒன்ற வங்காளதேசத்தில் முறியடிக்கப்பட்டது— 40 சிறுவர்கள் இதனால் காப்பாற்றப்பட்டனர்—

மத்திய கிழக்கு ஊடாக பாகிஸ்தானுக்கு கடத்தப்படவிருந்த 40 சிறவர்களை [illegible]

பினாபோல் நோக்கி பஸ் ஓடத் தொடங்கியது இடையில் பொலீஸார் பஸ்ஸை நிறுத்தி சோதனை நடத்தினர்—

பஸ்ஸிலிருந்த மூவரைப் பொலீஸார் கைது செய்தனர்—

கடத்தல் நாடகத்தை [illegible]



## விமானம் கடத்திய ரஷ்ய இளைஞரை நாடு கடத்த கோரிக்கை

மாஸ்கோ ஜூன் 10

112 பயணிகளுடன் ரஷ்ய விமானம ஒன்றைக் கடத்திச் சென்ற இளைஞனை சுவீடன் நாடு கடத்த வேண்டும—

இவ்வாறு ரஷ்யா சுவீடனைக் கேட்டிருக்கிறது—

திமித்ரி செமியொனொவ் என்ற 17 வயது இளைஞன் ரஷ்ய [illegible]

இந்த இளைஞன் கைக்குண்டைக் காட்டி அச்சுறுத்திக் கடத்திச் சென்றான்—

112 பயணிகளும 7 விமான மோட்டிகளும விமானத்திலிருந்தனர்—

விமானம ஸ்டொக்ஹோம விமான நிலையத்தில் தரை இறங்கியவுடன் செமியொ[illegible]

கூப்பட்டது. 40 சிறுவர்கள் இதனால் காப்பாற்றப்பட்டனர்.

மத்திய கிழக்கு ஊடாக பாகிஸ்தானுக்கு கடத்தப்பட இருந்த 40 சிறுவர்களும் பொலீஸாரின் தயவினால் மீட்கப்பட்டுள்ளனர்.

எட்டு முதல் 14 வயது கொண்ட இந்த 40 சிறுவர்களும் வெள்ளியன்று பஸ் ஒன்றில் ஏற்றப்பட்டனர்.

பின் இந்திய — வங்காள தேச எல்லைப்புற நகரான

பஸ்ஸிலிருந்த மூவரைப் பொலீஸார் கைது செய்தனர்.

கடத்தல் நாடகத்தை வெற்றிகரமாக நடத்தி வரும் ஒரு இயக்கம் பற்றி [illegible]ர்கள் மூலம் பொலீஸாருக்கு தகவல் கிட்டியது.

வங்காளதேசத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1000 சிறுவர்கள் வருடந்தோறும் காணாமல் போகின்றனர். [எ]



## ஆர்ப்பாட்டம் விளைவித்த மாணவர் கைது

தென்கொரியாவில் சோல் நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற வீதிக்கலவரமொன்றில் பாடசாலை மாணவர் ஒருவர் கைதானார். கலவரம் அடக்கும் பொலீஸார் மாணவரைக் கைது செய்த போது எடுக்கப்பட்ட படம். ஆர்ப்பாட்டத்தில் சுமார் 2000 பேர் கலந்து கொண்டனர். (எ*த)

நாடு கடத்த வேண்டும்.

இவ்வாறு ரஷ்யா சுவீடனைக் கேட்டிருக்கிறது.

திமித்ரி செமியொனொவ் என்ற 17 வயது இளைஞன் ரஷ்ய விமானத்தைக் கடத்தும் பொருட்டு கைக் குண்டு ஒன்றைப் பயன்படுத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

சுவீடன் தலைநகருக்கு புறப்பட்ட டியு—154 விமானத்தையே மோட்டிகளும் விமானத்திலிருந்தனர்.

விமானம் ஸ்டொக்ஹோம் விமான நிலையத்தில் தரை இறங்கியவுடன் செமியொனொவ் பொலீஸாரிடம் சரண் அடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

விமானம் கடத்திய இளைஞருக்கெதிரான விசாரணைகள் சுவீடனில் நடைபெறும். [எ]

# அரசியல் கைதிகள் 48 பேர் தெ. ஆபிரிக்காவில் விடுதலை:

கேப்டவுன் ஜூன் 10

தென் ஆபிரிக்காவில் 48 அரசியல் கைதிகள் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். நான்கு வருட கால அவசரகாலச் சட்டம் இருகு வெள்ளியன்று நீக்கப்பட்டது.

இதனையடுத்து அரசியல் கைதிகள் 48 பேரை விடுதலை செய்யும் முடிவும் எடுக்கப்பட்டது.

தென் ஆபிரிக்காவில் உள்ள நான்கு மாகாணங்களில் மூன்று மாகாணங்களில் மட்டுமே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது.

நேட்டால் மாகாணத்தில் கலவரங்களை ஒழிக்க முடியாதிருக்கிறது. இதனால் அங்கு விசேட பாதுகாப்பு அதிகாரங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் அவசரகாலச் சட்டத்தை அகற்ற முடியாதென ஜனாதிபதி பிரெடரிக் டி கிளார்க் அறிவித்தார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமபடி கேட்டிருந்தது. தாம முன்வைத்த திட்டங்கள் பற்றி ஆராய்ந்து ஜூலை 10 ஆம திகதிக்குள் ஒரு முடிவு எடுக்குமபடி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கேட்டிருந்தது.

மேற்படி காங்கிரஸின் கோரிக்கையை ஏற்றிருக்கும அரசாங்கம காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஆதரவளிக்கும விதத்தில் 48 பேரை விடுதலை செய்திருக்கிறது. [எ]

## லைபீரியாவில்: கிளர்ச்சியாளர் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம்

மொன்றோவயா ஜூன் 10

லைபீரிய கிளர்ச்சியாளர்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த இணங்கியுள்ளனர்.

சியரா லியொனுக்கு சமீபமாகவுள்ள பிரீடவுனில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கிளர்ச்சியாளர்கள் கோரியுள்ளனர்.

லைபீரிய கிளர்ச்சியாளர்களுக்கும அரசாங்க துருப்புக்களுக்கும இடையே கடந்த வாரம மோதல் இடம்பெற்றது தெரிந்ததே! இதனையடுத்து லைபீரியாவிலிருந்து அமெரிக்கர்களை உடனடியாக அமெரிக்கா திருப்பி அழைத்தமை குறிப்பிடத்தக்கது. [எ]

## பஸ் விபத்தில் 17 பேர் பலி

பீக்கிங ஜூன் 10

பீக்கிங்கிலிருந்து ஹெபி மாகாணத்துக்குப் புறப்பட்ட பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் 17 பேர் காயமடைந்தனர். 17 பேர் உயிரிழந்தனர். [எ]

## வங்காள தேசத்தில் விரைவில் தேர்தல் நடத்த எதிர்க்கட்சிகள் குரல்

டாக்கா, ஜூன் 10

வங்காள தேசத்தில் விரைவில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு வங்காளதேச எதிர்க்கட்சியினர் குரல் எழுப்பி உள்ளனர்.

வங்காள தேசத்தில் தேர்தல் அடுத்தாண்டு நடைபெறுமென ஜனாதிபதி ஹுசேன் மொகமட் ஏர்ஷாத் கூறியிருக்கிறார்.

அடுத்தாண்டு ஏப்ரல் 14 ஆம திகதிக்கும அக்டோபர் 14 க்குமிடையில் தேர்தல் நடைபெறுமென அவர் உறுதியளித்திருக்கிறார்.

வங்காளதேச எதிர்க்கட்சித் தலைவி ஹசீனா தேர்தல் நடத்துமபடி விடுத்திருக்கும வேண்டுகோளில் —

அரசாங்கம சகல வரி அறவிடுகளை அதிகரித்திருக்கிறது. [illegible] ஆரம்பித்தது.

அவ்வேளையிலேயே மக்கள் மீது வரிச் சுமையை அரசு சுமத்தியிருக்கிறது.

இதற்கிடையில் எதிர்வரும 17 ஆம திகதி பொது வேலை நிறுத்தமொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளோம எனத் தெரிவித்திருக்கிறார். (எ)

## ஐ. நா. குழு தெ. ஆபிரிக்கா வருகை

ஜோஹன்னர்ஸ்பேர்க் ஜூன் 10

எட்டுப் பேர் கொண்ட ஐ நா குழு ஒன்று சனிக்கிழமை தெ. ஆபிரிக்கா வந்து சேர்ந்தது.

தென் ஆபிரிக்க நிலைமைகளை நேரில் கண்டறியவே இக்குழு இங்கு வந்துள்ளது.

அரசாங்க அதிகாரிகள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரமுகர்கள் போன்றோரை ஐ நா குழு சந்திக்கும. பத்துத் தினங்கள் குழுவினர் தென் ஆபிரிக்காவில் தங்கியிருப்பர். [எ]

# சமாதான பேச்சு: அரபு நாடுகளுக்கு இஸ்ரவேல் பிரதமர் அழைப்பு

ஜெருஸலம, ஜூன் 10

இஸ்ரவேலுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்த அரபு நாடுகள் முன்வர வேண்டும. இவ்வாறு இஸ்ரவேல் பிரதமர் யிட்ஷாக் ஷமீர் தெரிவித்தார்.

இஸ்ரவேல வானொலிக்கு பிரதமர் ஷமீர் சனிக்கிழமை பேட்டி ஒன்றளித்தார். அந்தப் பேட்டியின் போது "அரபு நாடுகள் எமமுடன அமர்ந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவது சமாதானத்துக்கு வழி கோலும எனக் கூறினார்.

அரபு உலகத்துக்கு பல தடவைகள் சமாதானப் பேச்சு நடத்த வருமாறு நாம அழைப்பு விடுத்தோம. இப்போது நாம மீண்டும அவர்களுக்கு அழைப்பு விடுகின்றோம.

இவ்வாறு ஷமீர் கூறினார்.

இஸ்ரவேலில் யிட்ஷாக் ஷமீர் அமைத்திருக்கும புதிய அரசாங்கம இஸ்ரவேல் வரலாற்றிலேயே அதிக வலது சாரிகளைக் கொண்ட ஒரு அரசாங்கமாக அமைந்திருக்கிறது.

மத்திய கிழக்கு யுத்தமொன்றுக்கு தூண்டுதலாக இருந்து வந்த "டோவிஷ் தொழிற் கட்சியின் பங்களிப்பு புதிய அரசாங்கத்தில் இல்லை.

இவ்வாறு அரபு நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன. (எ)

## கிர்கிஸ் குடியரசில் 102 பேர் பலி

மாஸ்கோ, ஜூன் 10

ரஷ்யாவில் மத்திய ஆசிய குடியரசுகளான கிர்கிஸ், உஸ்பெக்கிஸ்தான் குடியரசுகளுக்கிடையே இப்போது பலத்த இனக் கலவரம உருவாகி உள்ளது.

இந்த இன மோதல்களின் விளைவாக கிர்கிஸ் குடியரசில் 102 பேர் உயிரிழந்தனர்.

436 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

ரஷ்ய செய்தி ஸ்தாபனமான டாஸ் இத்தகவலை வெளியிட்டது.

மேற்படி இரு குடியரசுகளிலும் நிலைமைகள் மோசமாகி உள்ளன. அவசர காலச் சட்டம பல மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டுள்ளது.

காணிப் பங்கீடு ஒன்றே மோதல்களுக்குக் காரணமென்வும தெரிய வருகிறது. (எ)

இந்தியா—நேபாளம்

# துண்டிக்கப்பட்ட உறவு மீண்டும் வலுப்பெறும்

## பிரதமர்கள் இருவரும் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றி

புதுடில்லி, ஜூன் 10

**துண்டிக்கப்பட்டிருந்த இந்திய — நேபாளம் வர்த்தக உறவு மீண்டும் வலுப்பெறும். இது குறித்து நடத்தப் பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.**

இந்தியாவில் நடந்த 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தைகளின் பின் இதுபற்றி அறிவிக்கப்பட்டது–

இந்தியாவுக்கும், நேபாளத்துக்குமிடையிலான வர்த்தக உறவை சீர் செய்ய முடியாது போனால் நான் ராஜினாமாச் செய்வேன் என நேபாளம் பிரதமர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் வெள்ளியன்று அறிவித்திருந்தார்–

இது விடயத்தில் இந்தியப் பிரதமர் வி.பி.சிங்கைச் சந்திக்கப் புறப்படுவதற்கு முன்னர் அவர் இவ்வாறு கூறினார்–

இந்தியப் பிரதமருக்கும் நேபாளப் பிரதமருக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் பின் விரிவான முறையில் இணக்கம் காணப்பட்டது–

இரு தரப்பிலான சகல வித உறவுகளையும் வளர்த்துக் கொள்வது குறித்த பேச்சுக்கள் வெற்றியளித்திருப்பதாக அதிகாரி ஒருவர் கூறினார்–

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இந்தியா, நேபாளத்துடனான உறவை முறித்துக் கொண்டது– அவ் வேளையில் முக்கியமான எல்லைப்புற பாதைகள் 15 இல் 13 ஐ இந்தியா மூடி விட்டது–

இந்தப் பாதைகளைத் திறந்து விடவும் இந்தியா இப்போது இணங்கியிருக்கிறது–

நேபாளம் சீனாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததால் இந்தியா நேபாளத்தை பகைத்துக் கொண்டதாக ராஜதந்திரிகள் கருதுகின்றனர்–

நேபாளப் பிரதமர் பட்டாராய் கடந்த ஏப்ரல் மாதமே பிரதமராகப் பதவியேற்றார்–

(எ)

### கப்பல் விபத்து: சூழல் பாதிப்பு

வாஷிங்டன் ஜூன் 10

நோர்வே எண்ணெய்க் கப்பல் ஒன்று டெக்ஸாஸ் கடற் பிராந்தியத்தில் தீப் பற்றி எரிந்தது–

இந்தத் தீ விபத்தினால் சூழல் பாதிக்கப்படும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது–

கழிவு எண்ணெய் ஒழுக்கினால் எண்ணெய் கடல் நீருடன் கலந்து இந்தப் பாதிப்பு ஏற்படும் ஆபத்து உருவாகியிருக்கிறது–

[எ]



உயிரிழந்த அமெ. வீரர் பரிசோதனை

மணிலாவிலிருந்து சுமார் 80 கிலோ மீட்டர் தொலைவில் வடக்கில் உள்ள ஏன்ஜலீஸ் நகரில் அமெரிக்கர்கள் இருவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டனர்.

அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த இந்த வீரர்கள் இருவரையும் டாக்டர் ஒருவர் பரிசோதிப்பதைப் படத்தில் காண்க.

(எ*த)

## உலகச் செய்திகள்



### பாகிஸ்தானுக்கு கடத்தப்படவிருந்த 40 சிறுவர்கள் மீட்பு

டாக்கா ஜூன் 10

சிறுவர் கடத்தல் ஒன்று வங்காளதேசத்தில் முறியடிக்கப்பட்டது– 40 சிறுவர்கள் இதனால் காப்பாற்றப்பட்டனர்–

